**செ.வெ.எண்– 39　　　　　　　　நாள்– 29.05.2026**

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்களின் செய்திக்குறிப்பு –

-----

ஈரோடு மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கிராம ஊராட்சி அளவில் காலியாக உள்ள 120 சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களை நிரப்ப தகுதியுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் பணிக்கான தகுதிகள்:**

| வ.எண் | விபரம் | தகுதிகள் |
|---|---|---|
| 1 | கல்வித் தகுதி | • 12ஆம் வகுப்பு தேர்ச்சி<br>• தமிழ் மற்றும் ஆங்கிலம் நன்றாக எழுதப் படிக்கவும் மற்றும் கணக்கிடும் திறன் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும் |
| 2 | வயது | 35 வயதுக்குள் இருத்தல் வேண்டும் |
| 3 | அனுபவம் | சுய உதவிக்குழு ஊக்குநராக குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். |
| 4 | பிற தகுதிகள் | • ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்த பெண் சுய உதவிக்குழு உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>• மக்கள் நிலை ஆய்வால் கண்டறியப்பட்ட இலக்கு மக்களாக இருத்தல் வேண்டும்.<br>• கணினி திறன் மற்றும் இரு சக்கர வாகனம் ஓட்ட தெரிந்த ஓட்டுநர் உரிமம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>• ஆண்ட்ராய்டு கைபேசி (Android phone) வைத்திருப்பவர்களாகவும், SMS மற்றும் whatsapp– ல் செய்தி அனுப்பவும், செயலி இயக்கும் திறன் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.<br>• வங்கிகளுக்குச் சென்று பரிவர்த்தனைகள் செய்யவும், கடன் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யவும் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் |

| | | |
|---|---|---|
| | | வேண்டும்.<br>• தகவல் தொடர்பு திறன் உடையவர்களாக இருத்தல் வேண்டும். |

காலிப்பணியிடம் உள்ள ஊராட்சிகளில் உள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர். தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுவர். தகுதியுள்ள நபர்கள் விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்கள் நகல்களுடன் நேரிலோ அல்லது தபாலிலோ சம்மந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 15.06.2026 **ஆம் தேதிக்குள்** அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ஊராட்சி அளவிலான காலிப்பணியிடங்கள் குறித்த விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட வட்டார அளவிலான கூட்டமைப்பு அலுவலகத்தினை அணுகி தகவல் பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.**